தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 94

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
ஞாயிற்றுக்கிழமைகளில் இதழ் கிடையாது.

THE "NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: புரட்டாசி 15உ வியாழன் (1—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 16உ வெள்ளி (2—10—53)


# ஆந்திர சர்க்கார் உருவாகியது!

## ஆந்திர கேசரி பிரதமர்— துணைப் பிரதமர் சஞ்சீவி

### தோழர் தென்னேட்டி விஸ்வநாதமும் அமைச்சர் குழுவில்

### தோழர்கள் கோடி (ரெட்டி)யாரும், சஞ்சீவியய்யாவும் மந்திரிகளாகின்றனர்

(டிரங்க் செய்தி)

கர்நூல், அக். 1—

மிக முதியவராக உள்ள ஆந்திர கேசரி பிரகாசம் புதிய ஆந்திர மாநில அரசின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றார். அவருடைய அமைச்சர் குழுவில், துணைப் பிரதமராக ஆந்திர காங்கிரஸ் குழு தலைவர் என். சஞ்சீவி (ரெட்டி)யார் பதவியில் அமருகிறார்.

தென்னேட்டி விஸ்வநாதம் அவர்களும், பிரகாசம் மந்திரி சபையில் ஒரு உறுப்பாகக் கொள்ளப்பட்டு இருக்கிறார்.

தோழர் கோடி (ரெட்டி)யார், நீண்டகாலமாக சட்ட சபை உறுப்பினராக இருந்து அனுபவம் பெற்றவர். அவரும் ஒரு மந்திரியாகிறார்.

ஆச்சாரியாரின் சென்னை மந்திரி சபையில் மந்திரியாக இருந்த சஞ்சீவியய்யாவுக்கு ஒரு மந்திரி பதவி கிடைத்திருக்கிறது.

மேலும் இருவர் அல்லது மூவர் பிரகாசம் அமைச்சர் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நேரு தோல்வியின் நினைவுக் குறியே ஆந்திர மாநிலம்!

### பலம் பொருந்திய சர்க்காரின் பிரதமர் அதிகாரப் பாவலை விரும்புவதாகப் பேசும் அபத்தம்!

ஆந்திர மாநிலத் துவக்க விழாவில் ஜவகர்

ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டிருப்பது பற்றி பிரதம மந்திரி நேரு, பின்வரும் செய்தியை வெளியிட்டிருக்கிறார்:—

"நீண்ட காலமாய் காத்திருந்து, எத்தனையோ விவாதங்களைச் செய்து முடித்த பிறகு, கடைசியில், இப்போது ஆந்திர மாநிலம் ஏற்பட்டுவிட்டது. இனிமேல் நாம் அந்த விவாதங்களை மறந்துவிட்டு, இந்தியாவிலுள்ள பல ராஜ்யங்கள் அடங்கிய குடும்பத்தில், புதிய அங்கத்தினராக வந்துள்ள ஆந்திர மாநிலத்திற்கு, நம் நல்வாழ்த்துக்களையெல்லாம் தெரிவித்துக் கொள்வோமாக. அது மட்டுமன்றி, இப்புதிய ராஜ்யம் சிறந்து வாழ்வதற்கு, நம்மால் சாத்தியமான மட்டிலும், நாம், உதவி செய்வோமாக.

"தாதிஷ்டவசமாய்ச் சென்னை ராஜதானி என்று கூறப்பட்டு வந்த பிரதேசத்தை பிரிவினை செய்யும் விஷயத்தில், கடைசி கட்டங்களில், தமிழர்களுக்கும், ஆந்திரர்களுக்குமிடையில் சிறிது நல்லெண்ணக் குறைவு ஏற்பட்டது வருத்தத்தக்கதாகும். எந்தப் பிரிவுமே, உடலையும், உள்ளத்தையும் உலுக்கத்தான் செய்யும்; எனவே, இதனால் ஏற்படுகிற வருத்த உணர்ச்சி எப்படியிருக்குமென்பதை நான் அறிவேன். ஆனால், நாம் ஒரு விஷயத்தைப் பற்றி முடிவாக தீர்மானித்து விட்டபிறகு, அதை, நல்ல மனதுடனும் பெருந்தன்மையுடனும் நிறைவேற்றி வைக்கவேண்டும். ஆந்திரர்கள் இதற்கு முன் பல ஆண்டுகளாக தங்களுக்கென ஒரு தனி அரசு வேண்டுமென்று

ஒரு செய்தியாகும். ஆந்திர மக்கள் அதற்காக வெகு காலம் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். அவர்களின் நீண்டகால ஆசை நிறைவேறுவது குறித்து, நான், அவர்களுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக ஏது பிறப்பதாயிருந்தாலும், அது துன்பத்தோடுதான் பிறக்கும்; அப்படிப் பிறந்த புதிதில் அதைக் கவனமாகப் பேணி, கவலையோடு பாதுகாப்பதும் அவசியம். நமது அரசியல் திட்டத்தின்படி ஒரு புதிய மாகாணம் உதயமாவதும், இப்போது விதிக்கு விலக்கல்ல. எனவே எல்லா ஆந்திரர்களும், ஆந்திரர் அல்லாதவர்களுங்கூட, இப்போது புதிதாக உதயமாகியுள்ள இந்த அரசுக்கு உதவி செய்வதைத் தங்கள் கடமை

(4-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் பார்க்க)

---

★★★★★★★★★★★★★★★★★★

### தோழர் மதியழகன் மீண்டும் சிறை புகுந்தார்

தி. மு. கழக துணைச் செயலாளரும், சிறை சென்ற தி. மு. க. தலைவர்கள் ஐவரில் ஒருவருமான தோழர் கே. ஏ. மதியழகன் 20—10—53 அன்று பரோலில் விடுதலையாகி 1—10—53 வியாழனன்று காலை மீண்டும் தன்னை சிறை அதிகாரியிடம் ஒப்படைத்துக் கொண்டார்.

★★★★★★★★★★★★★★★★★★

## இந்தியக் குடியரசு தலைவர் பல்லாண்டு

புதுடில்லி, செப். 25—

ஆந்திர அரசு ஏற்படுவதை பொட்டி; ராஜேந்திரப்பிரசாத், பத்திரிகைகளுக்கு பின்வரும் செய்தியை விடுத்திருக்கிறார்:—

இன்று ஆந்திர அரசு துவக்க விழா திருப்தியளிக்கக்கூடிய

---

★★★★★★★★★★★

### மதுரையில் கண்ணதாசன்

அக்டோபர் 3-ம் தேதி மதுரையில் நேருவுக்கு காட்டப்படும் கருப்புக் கொடி நிகழ்ச்சியில் கவிஞர் கண்ணதாசனும் கலந்துகொள்வார்.

★★★★★★★★★★★

### திருச்சி சிறையில் நம் தோழர்கள்

அதங்குடி தோழர்கள் பாலசுப்பிரமணியம், ஆர். செல்வமணி, ராமகிருஷ்ணன் ஆகியோர் திருச்சி மத்திய சிறையிலுள்ள தோழர்கள் மு. கருணாநிதி, ராம. சுப்பையா, முல்லை சக்தி, மூவரையும் சந்தித்தார்கள்; அவர்களும், மற்ற தோழர்களும் முகமலர்ச்சியாகவே இருக்கிறார்கள் என்று அதங்குடித் தோழர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

### செயற்கை முறையில் சினைப்படுத்தல்

கட்டாக், செப். 30—

இந்திய சர்க்கார் அளித்துள்ள 44,835 ரூபாயைக் கொண்டு ஒரிஸாவில், 20 கிராமங்களில், செயற்கை முறையில் சினைப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்படும்.

---

## நல்லக்குடி அறப்போர்

★

இன்று 79-வது நாள்

---

## சென்னை கழக தோழர்களே!

★

நம்மை ஒருமுறைக்கு இருமுறை, 'நான்சென்ஸ்' என்ற இழிவான சொல்லால் பழித்துப் பேசிய நேரு, நம் நகருக்கு வருகிறார்.

அவர் போக்கைக் கண்டித்த அறுவர் மாண்டனர்! அநேகர் சிறையில்! நமது பொதுச் செயலாளர் உள்ளிட்ட தலைவர்கள் சிறையில் வேதனை அனுபவிக்கின்றனர்! பலர் அங்கம் இழந்தனர்—அடி, உதைபட்டனர்! கஞ்சிக் கலயங்களைக் கையிலேந்தி நிற்கின்றனர்!

**இத்தனைக்கும் காரணமான நேரு, நம்மிடையே பவனி வருகிறார்!**

கழகத் தோழர்களே! சென்னை மாவட்ட கமிட்டியின் ஒருமனதான முடிவுப்படி, நம்முடைய கண்ணியத்தின்மீது ஆணையிட்டு, கட்டுப்பாட்டின்மீது நம்பிக்கை வைத்து, வரப்போகும் பண்டித நேருவுக்கு, கருப்புக் கொடி காட்டி, நமது கண்டனத்தைத் தெரிவிக்கத் தீர்மானித்துவிட்டோம்.

**2—10—53-ந் தேதி காலை 9-மணிக்கு மவுண்ட்ரோட்**

**சிம்சன் கம்பெனிக்கு அருகில்**

திரளுங்கள் — காட்டுவோம்

## கருப்புக் கொடி!

மேலே குறிப்பிட்ட இடத்தைத் தவிர வேறெங்கும் சிதறாது— கடமையைச் செய்வீர்—

"'நான்சென்ஸை' வாபஸ் பெறு"

"நேருவே திரும்பிப் போ"

இவையே, நமது இலட்சிய முழக்கமாக இருக்க வேண்டும். எந்த வகையிலும் அமைதி கெட கண்டிப்பாக ஒருவரும் நடந்து கொள்ளக் கூடாது.

சென்னை கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்ட பிரதிநிதிகளும் கருப்புக் கொடி நிகழ்ச்சியை முன்நின்று நடத்த ஒப்புதல் தந்துள்ளதால், தோழர்கள் அனைவரும் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டி நமது கழகத்தின் கண்ணியத்தைக் காக்க வாரீர் என அழைக்கிறேன்.

கே. எம். கண்ணபிரான்,
செயலாளர், தி. மு. கழகம், சென்னை மாவட்டம்.

---

## ஐவர் சிறையில்

★

### முதல் திங்கள் முடிந்தது

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களும், மற்ற முன்னணி வீரர்களும் சிறைக்குள் தள்ளப்பட்டு நேற்றோடு ஒரு திங்கள் முடிந்துவிட்டது. ஆற்றல் மிக்கவர்களை—அரும்பெரும் தலைவர்களை சிறைக்குள் அடைத்துவிட்டோம் என எக்காளமிட்ட ஆட்சிபீடம், அதிர்ச்சியுறும் வகையில் பொதுச் செயலாளர் சொல்லிச் சென்றபடி திராவிடத்தில், இல்லந்தோறும், நல்லவர் உள்ளந்தோறும் தி. மு. கழகம் இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட கழகங்கள் துவங்கியிருக்கின்றன. தன்னைக் காண வருவோரின் வாயிலாக இந்த நற்செய்தி கேட்டு நமது பொதுச் செயலாளர் பெருமைப் படுகிறார்—பூரிப்படைகிறார்,

மீண்டும் அவர் மக்கள் மத்தியிலே உலாவ, — கழகத் தோழர்களிடையே சிரித்து மகிழ இன்னும் இரண்டு திங்கள்—அறுபது நாட்கள் கழியவேண்டும் — நினைக்கும் போதே உள்ளத்தில் ஊசி பாய்வது போன்ற வேதனை பிறக்கத்தான் செய்கிறது. கண்ணீர் சொரிந்தாலும், கவலை ரேகைகள் முகத்தில் படர்ந்தாலும், பின்னிருந்தும் பொதுச் செயலாளர் அண்ணாதுரையும், மற்றும் சென்னை, திருச்சி, தூத்துக்குடி சிறையிலுள்ள கழக முன்னணி வீரர்கள் அனைவரும் விடுதலைபெறும் வரை கண்ணியமும், கட்டுப்பாடும் நம் கழகத்தின் கண்கள் என்பதை மறவாது செயலாற்ற வேண்டுகிறேன்.

## "நம் நாடு"
### வெளியூர் ஏஜெண்ட்டுத் தோழர்கட்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு, இன்று (1—10—53) செப்டம்பர் மாத பில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. பில் பாக்கித் தொகை, 10—10—53-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பில் பாக்கிகளை ஒரே தடவையில் அனுப்பாமல், 2, 3 தடவைகளில் அனுப்பியும், ஒவ்வொ பில்லிலும் பாக்கி வைத்துக்கொண்டுவரும் ஒரு சில ஏஜண்டுகளுக்குக் கடிதம் எழுதியும், கவனிக்காமலிருக்கிறார்கள் செப்டம்பர் மாத பில் பாக்கியுடன், பழைய பில் பாக்கியும் சேர்த்து ரூபாய் அனுப்பப்படாவிட்டால், பாக்கியுள்ள தோழர்கட்கு, 10-10-53-ல் "நம் நாடு" அனுப்புவதை நிறுத்தி, ஏஜன்சியையும் ரத்து செய்து, பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மணியார்டர், இன்ஷ்யூர், பாங்கி ட்ராப்டுகள் தனிப்பட்டவர் பெயருக்கு அனுப்பாமல், பொறுப்பாளர், "நம் நாடு," ராயபுரம், சென்னை—13 முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். "நம் நாடு" அதிகம் இதழ்கள் வேண்டும் என்று விரும்பும் தோழர்கள், டிபாசிட் தொகையும், இதழ் 1-க்கு ரூ. 2—0—0 வீதம் அதிகம் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

"நம் நாடு" பில் பாக்கியுள்ள தோழர்கள் பெயரும் 'நம் நாட்'டில் தொடர்ந்து வெளியிட்டுவரும்படி நேரிடும் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

சென்னை : இராயபுரம்
1—10—53.

பொறுப்பாளர்.
"நம் நாடு"


# நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 1—10—1953 வியாழன்


# முதல்தர அட்டூழியம்!

ஆச்சாரியார், பேசுகிற பொதுக்கூட்டங்களில் எல்லாம், தாம் பிரதமராக வந்து நிலையான சர்க்காரை ஏற்படுத்தி, ஏழை மக்களுக்கு நலம் பல தேடி இருப்பதாக கித்தாப்புப் பேசிக்கொள்ளுகிறார். தினம் தினம் இந்த வீரப்பிரதாபங்களைக் கேட்டுக் கேட்டு, பொதுமக்களின் காதுகள் செவிடாகிப் போயிருக்கிறது.

அவரைத் தாங்கி நிற்கும் ஏடுகளும், அவருடைய ஆற்றலையும் அறிவையும் வியந்தோதிவிட்டு, அவர் சாதித்துள்ளதாக அவராலேயே பீத்திக்கொள்ளப்படும் உப்புச் சப்பற்ற சாதனைகளைப் பத்திப் பத்தியாக வெளியிட்டுப் பரவசப்படுகின்றன. இந்தக் கள்ளச் சிந்தனையினரின் பித்தலாட்டங்களை, வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ளும் வெள்ளையுள்ளம் படைத்த பொதுமக்கள் நம்பி மோசம்போகிறார்கள்.

நாட்டு நிகழ்ச்சிகள், ஆச்சாரியார் ஜம்பம் அடித்துக் கொள்வது போலவுமில்லை; தேசிய ஏடுகளின் கற்பனை போலவுமில்லை. இளவளவும் வடிகட்டின பொய் என்பதை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டு இருக்கின்றது நாட்டு நடைமுறை.

ஆச்சாரியாரின், அரும்பெரும் பொதுநலம் பேணும் பணிகளுக்கு எடுத்துக்காட்டாக, முதல்முதலாக சென்னையில் ஓடிக்கொண்டிருந்த டிராம் விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். டிராம் நிர்வாகம் வெள்ளைக் கம்பெனியினுடையது. அந்தக் கம்பெனியின் பங்குதாரர்கள் அனைவரும் இங்கிலாந்தில் இருக்கிறார்கள். கம்பெனிக்கு நஷ்டம் வந்துவிட்டதாகக் கணக்குக் காட்டி, வெள்ளை அதிகாரி, கம்பெனியை மூடிவிட்டார். இதன் விளைவாக, வயதாகி விட்டவர்கள் என்று சாக்குக் கூறி, ஏற்கனவே வெள்ளை நிர்வாகியால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 500 தொழிலாளர்கள் போக, மீதமுள்ள 1,100 தொழிலாளர்கள் வேலையின்றி நடுத்தெருவில் கலங்கி நிற்கும் நிலை, இன்று ஏற்பட்டு இருக்கிறது.

இவ்வளவு டிராம் தொழிலாளர்களும் வேதனையோடு வீதியில் நிற்கிறார்கள் என்றால், அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த சுமார் 10,000 மக்கள் நித்தியப்படி பட்டினியாகக் கிடக்கிறார்கள் என்று பொருள். வயிற்றை நிரப்ப வழியில்லாத காரணத்தால், தொத்து நோய்களுக்கு அவர்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் பலியாகிக்கொண்டு இருக்கிறார்கள் என்று அருத்தம்.

டிராம் கம்பெனியை சர்க்காரே ஏற்று நடத்த முன்வந்து இருக்க வேண்டும். ஏற்று நடத்த ஆச்சாரியார் சர்க்காருக்கு விருப்பமில்லையானால், கம்பெனி வெள்ளை நிர்வாகி கேட்ட 2 லட்ச ரூபாய் கடனையாவது கொட்டிக் கொடுத்து, டிராம் மீண்டும் ஓட ஏற்பாடு செய்திருக்க வேண்டும். தொழிலாளருக்குச் சோறு, பொதுமக்களின் போக்குவரத்து வசதி ஆகிய இரு காரியங்களை மட்டுமே முக்கியமானதாகக்கொண்டு பார்க்கின்றபொழுது, இந்த வழியையே ஆச்சாரியார் சர்க்கார் சிறந்ததாகக் கொண்டு, மேற்கொண்டு இருக்க வேண்டும். இதுவும் ஆச்சாரியாருக்குப் பிடிக்கவில்லை.

தொழிலாளர், தங்கள் குடும்பங்களுடன் பட்டினி கிடந்து செத்து மடிந்தாலும், பிரயாண வசதி குறைவினால் பொதுமக்கள் எவ்வளவு சங்கடங்களுக்கு உள்ளானாலும், ஆச்சாரியார் சர்க்காருக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

மயான அமைதி - ஒழுங்கை நாட்டில் இருக்கப் பார்த்துக் கொள்வதுதான் ஒரு ஜனநாயக சர்க்காரின் பொறுப்பு; அதுவே வெற்றியான நிர்வாகத்தின் லட்சணம் என்று நம்பிக்கொண்டிருப்பவரிடம் தொழிலாளி, பொதுமக்கள் நலம் என்றெல்லாம் பேசுவதில் பயன் என்ன காணமுடியும்?

வேலையின்றி வாடிக் கிடக்கும் 200 டிராம் தொழிலாளர்களை, சர்க்கார் பஸ் சர்வீசில் வேலைக்கமர்த்திக் கொள்ள முதல் சலுகைக் காட்டப்படும் என்று, சென்னை சர்க்காரின் பஸ் மந்திரி கூறுகிறார். இதுவும் உடனடியாக அல்ல இதற்கும் 3 திங்கள் ஆகும்.

இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு இன்னும் 10 ஆண்டுகளில் பரிகாரம் தேடிவிட முடியும் என்று, யூனியன் நிதி மந்திரி தைரியம் கூறும்போது, டிராம் தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குப் பரிகாரம் தேட சென்னை சர்க்காருக்கும் இன்னும் குறைந்தது 5 ஆண்டு அவகாசமாவது தேவைப்படாதா?

டிராம் தொழிலாளர் 200 பேருக்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு, மீதமுள்ள 900 தொழிலாளர்களை சர்க்கார் முச்சந்தியில் விடத் துணிவது, எந்தவகையான நியாயமோ. நமக்குப் புரியவில்லை 'கண்ணன் காட்டிய வழி' இதுதான் போலும்!

இது ஒரு பக்கம் இருக்க, ஆந்திர மாநில அமைப்பின் எதிரொலியாக, சென்னை சர்க்காரின் இரண்டொரு இலாகாகளில் ஆள்குறைப்பு செய்யப்போவதாக சர்க்கார் அறிவித்திருக்கிறது. 300-க்கு அதிகமான சர்க்கார் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு ஒரு மாத அறிவிப்பும் எழுத்து மூலம் சர்க்கார் கொடுத்துவிட்டு இருக்கிறது

இந்த சர்க்கார் ஊழியர்கள் அனைவரும் ஜெஜட் பதிவில்லாத சர்க்கா ஊழியர்களாகும். இவர்களில் பெரும்பாலோர் 100 ரூபாயுக்கும் குறைவாகவே மாதச் சம்பளம் பெறுபவர்களாக இருப்பவர்கள். உணவுப் பொருள் விலையேற்றத்தின் காரணமாக, தாங்கள் வாங்கும் சம்பளம் போதாததினால், இராப் பட்டினி, பகல் பட்டினி கிடந்து, உடலை விட்டு உயிர் நீங்கிவிடாமல் பார்த்துக்கொண்டு, இதுவரை வாழ்ந்து வந்தவர்கள். இவர்களுக்குச் சீட்டுக் கிழிப்பதின்மூலம், அரை வயிற்றுச் சோறும் அவர்களுக்குக் கிடைக்கவொட்டாமல் அடித்துவிடுவதென்று சென்னை சர்க்கார் சங்கல்பம் செய்து கொண்டு இருக்கிறது.

ஆந்திர மாநிலத்துக்குச் செல்லவேண்டிய ஆந்திர சர்க்கார் ஊழியர் பலர் இன்னமும் சென்னை சர்க்கார் காரியாலயங்களில் இருந்துவருகிறார்கள் என்று தெரிகிறது. புதிய ஆந்திரத்திற்கு அவர்கள் ஊழியம் தேவைப்படுகிறது அவர்களை அங்கு பணிபுரிய அனுப்புவதின்மூலம், இங்கு அடுத்தத் திங்களோடு வெளியேற்ற இருக்கிறவர்களில் சிலரையாவது சென்னை சர்க்கார் வேலையிலேயே வைத்துக்கொள்ள முடியும் சாதாரண அறிவு படைத்தவர்களுக்கும் இது விளங்காமல் போகாது. அதிமேதாவியான ஆச்சாரியாருக்கு இது புலனாகாமல்போனது வேதனை தரும் விசித்திரமானதாகத்தான் இருக்கிறது.

ஏற்கனவே நாட்டில் வேலையில்லாத் தொகை கூடிக் கொண்டே போகிறது. அவர்கள் எழுப்பும் அழுகுரல், மனித உள்ளம் படைத்த அனைவருடைய உள்ளங்களையும் துளைத்துக்கொண்டு இருக்கிறது. இதனால் சமுதாய உறவு முறை மணல்மேடுபோல் வெகு வேகமாக சரிந்துகொண்டே போகிறது. இதைக் கண்டும் காணாதவர்போல் ஆச்சாரியார், கீழ் நாட்டுக் கலாசாரம் பேசுகிறார் கலாசாரம்! அவருடைய கலாசார சிறப்பின் எடுத்துக்காட்டுக்கு இன்று நாட்டின் கேவல நிலை ஒன்றே போதுமானது.

வேண்டுமென்றே இந்த அட்டூழியத்தை ஆச்சாரியார் மனமொப்பி செய்கிறார் என்று நாம் குற்றம் சாட்டுகிறோம். வக்கிருக்கிறது என்றால், வேலையிலிருந்து விலக வேண்டுமென்று கொடுத்துள்ள அறிக்கையை உடனடியாக வாபஸ் வாங்கிக்கொண்டு, டிராம் மீண்டும் ஓடச்செய்து, தொழிலாளர் அனைவருக்கும் வேலை கொடுத்து, பொதுமக்களுக்கும் பிரயாண வசதி தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யட்டும் ஆச்சாரியார். வெறும் வாய் வம்பளிப்பில் வளம் சேர்ந்துவிடாது என்பதை, ஆச்சாரியார் உணர வேண்டுகிறோம்.

## 33 தி. மு. கழகத்தோழர்களை ஜாமீனில் விட உத்தரவு

"ஜாமீனில் விடக்கூடிய குற்றங்களுக்கும் ஜாமீனில் விட கீழ்கோர்ட் மறுத்தது ஆச்சரியமாயிருக்கிறது"

சென்னை, செப். 30—

ஜூலை 15-ல், திராவிட முன்னேற்றக் கழகம் அவக்கிய ரயில் நிறுத்த அறப்போரில் கலந்துகொண்டு, கோவை பாஸஞ்சர் ரயிலை சங்கிலியைப் பற்றி இழுத்து நிறுத்தினதாக, அத்துக்குடி துரியப்பன் உள்ளிட்ட 33 தோழர்கள் மீது, அத்துக்குடி போலீசாரால் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இவர்களை கீழ்க் கோர்ட் இதுவரை ஜாமீனில் விட மறுத்து வந்தது. இவர்களை ஜாமீனில் விடுமாறு கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில், நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையில், ஜாமீன் மனு ஒன்றை வழக்கறிஞர் தோழர் கே. நாராயணசாமி கொடுத்தார். அவருக்குத் துணையாக வழக்கறிஞர் தோழர் எம். திருஞானசுந்தரம் இருந்தார்.

ஜாமீன் மனுவைக் கொடுத்த வழக்கறிஞர், அவர்கள் மீது காட்டப்பட்டுள்ள குற்றம் ஜாமீனில் விடக்கூடியதே யாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவர்களை ஜாமீனில் விட மனு ஒன்றை திருநெல்வேலி செஷன்ஸ் நீதிபதி முன் ஏற்கெனவே கொடுக்கப்பட்டது.

வழக்கு புலன் விசாரணையில் இருக்கும் பொழுது, இவர்களை ஜாமீனில் விடுவது வழக்கை பாதிக்கக் கூடியதாக இருக்கும் என்று காரணங்காட்டி, தோழர்களின் ஜாமீன் மனுவைத் தள்ளிவிட்டார்.

உயர் நீதிமன்ற நீதிபதி ஜாமீன் மனுவை ஏற்றுக்கொண்டு, தனது தீர்ப்பில் மேற்குறித்தவாறு குறிப்பிட்டு, தோழர்களை ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

ஒவ்வொரு நபரும் ரூ 500க்கு சொந்த பாண்டு எழுதிக்கொடுத்ததும், ரூ. 250க்கு இரண்டு நபர் பாண்டு எழுதிக் கொடுத்ததும் ஜாமீனில் செல்ல அனுமதிக்குமாறு தீர்ப்பில் நீதிபதி கூறியுள்ளார்.

## செய்தி அலைகள்

✶

### வெட்டுக்கிளி ஒழிப்பு—பூர்வீகக் குடிமக்கள் எதிர்ப்பு

அடிஸ் அபாபா, செப். 30—

கிழக்கு எதியோபியாவில் வசிக்கும் 'இஸ்ஸா' என்ற பூர்வீகக் குடிமக்கள், வெட்டுக்கிளி ஒழிப்புத் திட்டங்களை எதிர்க்கின்றனர். இவர்கள் வாழும் பிரதேசத்தில் வெட்டுக்கிளி உற்பத்தி ஏராளம். வெட்டுக்கிளி 'வறுவல்', இந்த பூர்வீகக் குடிமக்களுக்கு மிகவும் பிடித்தமானது. இதை ஒழித்துவிட்டால் என்ன செய்வது என்றுதான் எதிர்க்கின்றனர்.

* * *

### ஹிட்லர் வாழ்க்கை பற்றிய சினிமாப் படம்

பிராங்க்பர்ட், செப். 30—

ஹிட்லரை கடைசி காலத்தில் மணந்த இவாபிரான் எடுத்த சினிமாப் படமொன்று அக்டோபர் கடைசியில் மேற்கு ஜெர்மனி பூராவும் காட்டப்படுமென்று தெரிகிறது. இப்படத்தில், ஹிட்லரின் ஆவேசப் பேச்சுகளும், மற்றும் கோயபெல்ஸ், கோயரிங், ருடால்ப் ஹெஸ் ஆகியோர்களின் பிரசங்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

* * *

### இந்தியாவுக்கு வருகிறார்!

லண்டன், செப். 30—

பிரிட்டனில் வெகு வேகமாக மோட்டார் கார் ஓட்டும் பிரபல வீரன், தன் மோட்டார் சகிதங்களுடன் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விருக்கிறார். இதனால் பல விபத்துகள் ஏற்பட்டு, எவ்வளவோ ஆபரேஷன்கள் அவருக்கு செய்யப்பட்டிருக்கின்றன. அவரது இடது கை, போல்ட், கம்பி, ஆணி இவைகளில் ஒன்று சேர்க்கப்பட்டு இருப்பது ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

* * *

### இந்தியர் கல்விக்கு நன்கொடை

டர்பன், செப். 30—

இம்மாதம் காலமான ஹாஜி முகம்மது சுல்தான், தென்னாப்பிரிக்க இந்தியர்களின் கல்வி அபிவிருத்திக்காக 2,00,000 பவுன்களை விட்டுச் சென்றிருக்கிறார். இவர் இறக்குமுன், 20,000 பவுன்களை நேட்டால் சர்வகலாசாலைக்கு நன்கொடையாக அளித்தார்.

* * *

### நவீன நாவல்கள்!

லண்டன், செப். 30—

மனித உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள வேண்டுமென்னும் பாரம்பரை வழக்கத்தை, நவீன புத்தகாசிரியர்கள், புறக்கணித்து, கற்பையும் அலட்சியம் செய்கின்றனர் என்று யார்க் ஆர்ச் பிஷப் கண்டித்தார்.

* * *

### திறமை குறைந்துவிட்டதா?

சென்னை, செப். 30—

"இந்திய விமான சர்வீஸ் தேசிய மாக்கப்பட்டுவிட்ட பிறகு, அதன் சிப்பந்திகளின் கட்டுப்பாடும், திறமையும் குறைந்துவிட்டனவா?" என்று கேட்கப்பட்டால், அதற்குபதில், "ஆம்" என்றுதான் சொல்ல வேண்டுமென்று ஒரு விமான பிரயாணி கூறியுள்ளாராம்!

* * *

### தாக்குதலுக்கு ஆயத்தம்?

பாரிஸ், செப். 30—

இந்தோ சீனாவில், சிவப்பு நதி டெல்டா பிரதேசத்தில், 5 டிவிஷன்களை வியட்மின்கள் தயாராக வைத்துள்ளனர் என்றும், அநேகமாக வெகு சீக்கிரமே அவர்கள் தாக்குதல்களை ஆரம்பிக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

# 37-வது வட்ட தோழர்கள் வழக்கு

சென்னை, செப். 30—

21—9—53-ல் இராயப்பேட்டையில் கண்டனக் கூட்டமும், ஊர்வலமும் நடத்திய தோழர்கள் த. வெற்றிவீரன், பொ. நா. சண்முகம், ம. கி. இராமலிங்கம், வி. என். கண்ணன், கெ. கிருஷ்ணமூர்த்தி, மு. தாஸ், பி. நாகராசன், எ. செல்வம் ஆகிய தோழர்கள்மீது, போலீசார், இராயப்பேட்டை முத்து முதலி தெருவில், போக்கு வரத்துக்கு இடைஞ்சல் உண்டாக்கி, குழப்பம் செய்ததாக, 75-வது செக்ஷன்கீழ் 'நியூசன்ஸ்' வழக்காக பதிவு செய்து, சைதாப்பேட்டை கோர்ட்டில், 30—9—53 காலை பிரதம மாகாண கௌரவ நீதிபதிகளான லட்சுமணசாமி முதலியார், இராமசாமி முதலியார், துரைசாமி முதலியார் ஆகியோர் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

மாஜிஸ் :—நீங்கள், 21-9-53-ல் இராயப்பேட்டை முத்து முதலி தெருவில், போக்கு வரத்துக்கு இடைஞ்சல் உண்டாக்கி குழப்பம் செய்தீர்களா?

தோழர்கள் :—நாங்கள் கூட்டம்தான் நடத்தினோமே தவிர, போக்குவரத்துக்கு இடைஞ்சல் உண்டாக்கிக் குழப்பம் செய்யவில்லை.

மா :—எதற்காகக் கூட்டம் போட்டீர்கள்?

தோ :—தி. மு. கழகத் தலைவர்களையும், ஏனைய தோழர்களையும் விடுதலை செய்யக் கோரியும், கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்றும் கூட்டம் நடத்தினோம்.

மா :—போலீசாரின் அனுமதி பெற்றீர்களா?

தோ :—போலீசாரிடம் அனுமதி கேட்டோம்; ஆனால், தரவில்லை; எனவே கூட்டம் நடத்தினோம்.

வழக்கு விசாரணை அன்று, தோழர் வெற்றிவீரன் தவிர ஏனைய தோழர்கள் அனைவரும் வந்திருந்தனர்.

நீதிபதி அவர்கள், 75-வது செக்ஷனைத் திருத்தி, வழக்கை 41-வது செக்ஷன்படி பதிவு செய்துகொண்டு, அக். 14-ந் தேதியன்று; சாட்சிகளோடு வருமாறு தெரிவித்தார்.

கழகச் செயலாளர் தோழர் கோ. இளவரசு, உடனிருந்து வழக்கைக் கவனித்து வந்தார்.

## நெல்லைத் தோழருக்கு ஒரு நாள் தண்டனை

நெல்லை, செப் 30—

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட தோழர் பி. காசிவிசுவலிங்கத்தை நெல்லை சப்-மாஜிஸ்திரேட் அவர்கள் 24—9—53 அன்று விசாரித்து ஒரு நாள் தண்டனை விதித்தார்.

## காஞ்சி தோழர்கள் கைதாகி விடுதலை

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் அண்மையில் காஞ்சிபுரம் வந்தபோது காஞ்சி திருக்கச்சிநம்பித் தெரு, 'திராவிட நாடு' அலுவலகத்தின் முன்பாக கருப்புத் துணி தோரணங்கள் கட்டியதாக தோழர்கள் மாணிக்கம், வெங்கடேசன் ஆகிய இருவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டனர்.

## நாகர்கோயிலில்

தூத்துக்குடி, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு நிதி தரும் பொதுக்கூட்டம் [illegible]—10—53 வெள்ளி அன்று [illegible]சபைத் திடலில் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., நாஞ்சில் மனோகரன் ஆகியோர் கூட்டத்தில் பேசுவர்.

# தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

தூத்துக்குடியில் ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் தி. மு. கழகத் தோழர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களை ஆச்சாரியார் சர்க்கார் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு, நால்வர் மாண்டும், பலர் காயமுற்றிருக்கிறார்கள். ஆனாலும், ஆச்சாரியார் சர்க்காரின் அடக்குமுறை பசி தீர்ந்தபாடில்லை. நம் தி. மு. கழகத் தோழர்கள் மீதும், தொழிலாளர்கள் மீதும்—புதுக்கிராமக் கொள்ளை, கொலை, சதிவழக்குகள் என்ற பெயரால் பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும், பார்ப்பன அதிகாரிகளும் கட்டுப்பாடாகத் திட்டமிட்டு, நம் தி. மு. கழகத்தையும், நம் தி. மு. கழகத் தோழர்களின் உணர்ச்சியையும் ஒழித்து, நசுக்கிவிடலாமென்ற எண்ணத்தில், சட்டங்களின் துணைகொண்டு, பல செக்ஷன்களைப் புகுத்தி, குற்றம் சாட்டி, வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். இந்த அநீதியை எதிர்த்துப் போராட வழக்குமன்றம் செல்லவேண்டியிருக்கிறது. அதற்காக பொருளுதவி தேவைப்படுகிறது. "அன்புடன் உதவுங்கள்," என்று, தி. மு. கழக[ப்] பொருளாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்கள். தாம் செல்லும் இடங்களிலெல்லாம் தூத்துக்குடி வழக்கு நிதிக்கு பொருள் வசூலித்து அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

நம் அருமைத் தோழர்களும், தி. மு. கழகத்துக்கு ஆதரவு நல்கும் பொதுமக்களும், மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கும் ஒவ்வொரு ரூபாயும், ஆச்சாரியார் ஆட்சியின் அடக்குமுறைக் கொடுமையை எதிர்த்துப் போராட, அநீதியை சுக்கல்நூறாக்க, சம்மட்டி கொண்டு அடிக்கும் சிறந்த நன்முயற்சிக்கு பயன்படுத்தப்படும் என்று கூறி வசூலின் விபரத்தை கீழே தருகிறோம் :—

| | | |
|---|---|---|
| "நம் நாடு"வில் முன் வசூல் | ரூ. | 46—9—6 |
| தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. மூலம்:— | | |
| தூத்துக்குடி தி. மு கழக ஆதரவாளர் | " | 100—0—0 |
| " எஸ். நீதிமாணிக்கம் | " | 21—0—0 |
| " ஆர். தங்கசாமி நாடார் | " | 21—0—0 |
| " கே. ஏ. எஸ். நடராசன் | " | 15—0—0 |
| பாப்பநாய்க்கம்பாளையம் தோழர்கள் போஸ்டல் ஆர்டர் மூலம் | " | 5—0—0 |
| மதுரை ப. சுந்தரம் (செக்) | " | 5—0—0 |
| சென்னை புரசைவாக்கம் தோழியர் ஜெபமாலை அம்மையார் | " | 3—0—0 |
| வடாற்காடு, திருப்பத்தூர் பொதுக்கூட்டத்தில் உண்டியல் வசூல் —(ஏ. கோவிந்தசாமி அவர்கள் மூலம்) | " | 48—14—6 |
| சென்னை எஸ். அப்துல் | " | 1—0—0 |
| " கீழ்ப்பாக்கம் காசிசாமி | " | 5—0—0 |
| " ப. பார்த்தசாரதி | " | 1—0—0 |
| சுசீந்திரம் சி. எஸ் மணி—போஸ்டல் ஆர்டர் மூலம் | " | 2—0—0 |
| மணியார்டர் மூலமாக வந்தது :— | | |
| திருச்சி தி. மு. கழக தோழர் ஏ. நடராசன் | " | 5—0—0 |
| " ப. புருஷோத்தமன் | " | 5—0—0 |
| திருமங்கலம் ந. தனுசுக்கோடி மூலம் :— | | |
| " சவுந்திரபாண்டியன் | " | 3—0—0 |
| " மு. ராமசாமி | " | 1—0—0 |
| சித்தூர் கா. மு. எர்ரப்பா | " | 1—0—0 |
| சலகண்டபுரம் ஏ. எஸ். கே சாமி | " | 2—0—0 |
| சென்னை வண்ணாரப்பேட்டை எஸ். சண்முகம் | " | 1—0—0 |
| திருச்சி து. புதுப்பட்டி ஆற்றலழகன் | " | 5—0—0 |
| நாடார்பேட்டை பொ. துரைபாண்டியன் | " | 5—0—0 |
| " அ. மகராசன் | " | 5—0—0 |
| குடந்தை எல். ரத்தினம் மூலம் :— | | |
| " எல். ரத்தினம் | " | 2—0—0 |
| " சி. செல்வலிங்கம் | " | 1—0—0 |
| " ஜனுப்பூசப்கான் | " | 1—0—0 |
| " தோல்கிடங்கு ராஜமுகம்மது | " | 2—0—0 |
| " பி. பிச்சைமுத்து | " | 1—0—0 |
| " கவுன்சிலர் பாவாஜான் சாயபு | " | 2—0—0 |
| " பி. தங்கவேலு | " | 1—0—0 |
| போடிநாய்க்கனூர் அ. அ. பரமசிவன், | " | 5—0—0 |
| விருதுநகர் டி ஏகநாஸ், | " | 6—0—0 |
| பொன்னாச்சி அ. ச பாலு, | " | 2—0—0 |
| " மதிமன்னன் | " | 2—0—0 |
| திருமங்கலம் தனுக்கோடி | " | 2—0—0 |
| நாமக்கல் எஸ். சின்னசாமி | " | 1—0—0 |
| " கே. பி. வேலாயுதம் | " | 1—0—0 |
| தூத்துக்குடி கே. பழனிசாமி | " | 1—0—0 |
| " பி. நவமணி | " | 1—0—0 |
| " அ. அருணாசலம் | " | 1—0—0 |
| " ஆர். ஏ. முனியசாமி | " | 1—0—0 |
| அரியலூர் டி. எம். ராசு | " | 1—0—0 |
| முத்தாப்பேட்டை வி. ராமநாதன் | " | 1—0—0 |
| தாழையூத்து எஸ். சாமிநாதன் | " | 1—0—0 |
| தஞ்சாவூர் அரிஅரன் | " | 1—0—0 |
| கவுந்தப்பாடி எ. வி. தவசியப்பன் | " | 1—0—0 |
| செவ்வாய்ப்பேட்டை சேலம் தேவதாஸ்காந்தி | " | 1—0—0 |
| திருச்சி கே. ஜம்புலிங்கம் | " | 1—0—0 |
| வெங்கடங்கால், தமிழரசி | " | 5—0—0 |
| விருத்தாசலம் கே. கே. மாரியப்பா | " | 5—0—0 |
| கோயமுத்தூர் எஸ். சண்முகம் | " | 1—0—0 |
| விருதுநகர் கருப்புசாமி | " | 1—14—0 |
| போடிநாயகனூர் கே. என். மைதீன் | " | 1—0—0 |

(இதன் தொடர்ச்சி அடுத்த பத்தியில் பார்க்கவும்)

# கோவைப் பகுதியில் நேருவுக்குக் கருப்புக் கொடி

20—9—53-ல், திருப்பூரில் கூடிய கோவை மாவட்ட தி. மு. கழகக் கூட்டத்தில், அக்டோபர் 4-ந் தேதி, பண்டித நேரு கோவை மாவட்டத்தில், அவர் செல்லும் இடங்களில், கருப்புக் கொடி காட்டுவது என முடிவு செய்திருப்பதையொட்டி, புளியம்பட்டி, சத்தியமங்கலம், தொட்டம்பாளையம் தி. மு. கழகத் தோழர்கள், பவானிசாகரில், பண்டித நேருவுக்கு, அக்டோபர் 4-ந் தேதி பிற்பகல் 3-மணிக்கு கருப்புக் கொடி காட்டுவோர்கள்.

அதற்கான ஏற்பாடுகள் வகுக்க 26-9-53 சனிக்கிழமை, புளியம்பட்டி தி. மு. கழக இல்லத்தில், தோழர் வி. என். ராசு தலைமையில், சத்தியமங்கலம், தொட்டம்பாளையம், புளியம்பட்டி கழகச் செயலாளர்களும், தோழர்களும் கலந்துகொண்ட கூட்டம் சிறப்பாக நடைபெற்றது அதுபோது அக். 4-ந் தேதி ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, பண்டித நேரு பவானிசாகருக்கு செல்லுகையில், மேற்கண்ட மூன்று ஊர்களின் கழகத் தோழர்கள், கோபி வி என். இராசு தலைமையில் கருப்புக்கொடி காட்டுவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கருப்புக் கொடி நிகழ்ச்சியை முன்னின்று நடத்த கோபி வி. என். இராசு, புளியம்பட்டி பி. ஏ. சாமிநாதன், சத்தியமங்கலம் கே. செங்கோட்டு[வேல்] ஆகியோரைக் கொண்ட போராட்டக் கமிட்டி அமைக்கப்பட்டது.

கருப்புக்கொடி நிகழ்ச்சியில் கலந்துகொள்வோர், முன்கூட்டியே அந்தந்தப் பகுதியிலுள்ள போராட்டக் கமிட்டி உறுப்பினர் யாரிடமாவது தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## 15,000 பேருக்கு ஆசிரியர் வேலை

பம்பாய் சர்க்காரின் புதிய திட்டம்

புனா, செப் 29—

படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடும் 15,000 பேர்களுக்கு வேலை தரும் பொருட்டு, மேலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க பம்பாய் சர்க்கார் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஆசிரியர் அமர்த்தப் படுவார்

இந்திய சர்க்காரின் அங்கீகாரத்திற்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

படித்தோரிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து மாநில சர்க்காருக்கு பணம் வந்தவுடன் இந்த திட்டம் அமுல் நடத்தப்படும். இந்தச் செய்தியை பம்பாய் அசெம்பிளியில் கல்வி மந்திரி இன்று அறிவித்தார்.

## நாடு சிதறாது!

நாகபுரி, செப். 25—

"மொழிவாரி மாகாணப் பிரிவினையினால் நாடு சிதறுண்டு போய்விடுமெனக் கூறுவது பெருந் தவறாகும். எப்படியும் காலப் போக்கில் ஏழு புது மாநில அரசுகள் ஏற்படும்; தற்போதுள்ள 10 மாநில அரசுகள் மறைந்துவிடும். இதனால், மொழிவாரி பிரிவினையால் 3 மாநில அரசுகள் குறைந்துவிடும்,"

என மத்திய பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# தூத்துக்குடி தோழர்கள் காவலில்

★

இன்னும் எத்தனை நாள்?

## திருவாங்கூர்-கொச்சியில் பொதுத் தேர்தல்

திருவனந்தபுரம், செப். 30—

இப்போது காணப்படும் அறிகுறிகளின்படி, திருவாங்கூர்—கொச்சியில், 1954 பிப்ரவரியில், பொதுத் தேர்தல் நடைபெறுமெனத் தெரிகிறது.

திருவாங்கூர்—கொச்சி சட்டசபைக்கு, 117 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கான வாக்காளர் பட்டியல், இவ்வாண்டு முடிவதற்குள் தயாரிக்கப்பட்டுவிடும் எனத் தெரிகிறது.

புது மந்திரிசபை ஏற்படும் வரை, இப்போதுள்ள 6 பேர் கொண்ட மந்திரிசபையே தொடர்ந்து நிர்வாகத்தை நடத்திவரும். —ரேபன்.

(முன் பத்தியின் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| பொன்மலை கா. வேணுகோபால் | " | 2—0—0 |
| " கா. கிருஷ்ணசாமி | " | 2—0—0 |
| " பி. பாலகிருஷ்ணன் | " | 2—0—0 |
| " ரெ. லட்சுமிநாராயணன் | " | 2—0—0 |
| திருவண்ணாமலை சுந்தரம் | " | 1—0—0 |
| இளம்கரிசல்குளம் தி. மு. கழகம் | " | 5—0—0 |
| சலகண்டபுரம் 4-வது வார்டு | | |
| " ஜே. பி. வெங்கடாசலம் | " | 1—8—0 |
| 2-வது வார்டு ஏ. மதலையப்பன் | " | 1—0—0 |
| சத்தியமங்கலம் எஸ். என். சாமிநாதன் | " | 1—0—0 |
| குடியாத்தம் சந்தைப்பேட்டை டி. எம். முருகேசன் | " | 1—0—0 |
| சென்னை 39-வது, வட்டம் ஈவினிங்பஜார் போடோ கம்பெனி தொழிலாளர் சார்பில், தோழர் ஏ. குருமூர்த்தி மூலம் | " | 7—4—0 |
| ஆக மொத்தம் ரூபாய் | | 387—2—0 |

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உதவியனுப்புவோர், தோழர் அ. பொன்னம்பலனார், 24, சூரியநாராயண செட்டித் தெரு, ராயபுரம், சென்னை—13 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

## பிரசாத் செய்தி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாகவும், தங்களுக்குக் கிடைத்துள்ள பெருமையாகவும் கருத வேண்டும். ஆந்திரர்கள் விஷயத்தில் அது ஒரு முக்கிய பொறுப்பு என்பதைக் கூறத் தேவையில்லை.

இப்புதிய மாகாணம் சாதுர்யத்தோடு நிர்வகிக்கப்படுவதற்கும், அதன் ஆதரவுக்குட்பட்ட மக்கள் நீண்டநாள் அதிக மகிழ்ச்சியையும், நலனையும் அடைவதற்கும் வேண்டிய வகையில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பது தான்; நான், அவர்களுக்கு விடுக்கும் செய்தி. புதிய மாகாணப் பற்றிய எந்தக் காரியத்தையும் கவனமாகத் திட்டமிட்டு வேலை செய்வது அவசியம். சட்டத்துடன், சிந்தனை, செயல் ஆகிய இரு வகைகளிலும் சிக்கனமாக நடந்து கொள்வதும் அவசியமாகும். செலவிடப்படும் ஒவ்வொரு காசுக்கும், சாத்தியமான மட்டிலும் அதிகப் பலனைத் தரவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்; மேலும் நாம் எண்ணும் எண்ணமும், பேசும் ஒவ்வொரு வார்த்தையும், செய்யும் ஒவ்வொரு செயலும் அந்த மாகாணத்திலுடையவும், மக்களிலுடையவும், பொது நன்மைக்கு மிகவும் உகந்ததாக இருக்கவேண்டுமென்பதுடன், ஆந்திர அரசும், ஆந்திர மக்களும் இந்திய யூனியனின் ஒரு பகுதி என்பதை மறக்காமல் குறிப்பிடத் தக்க நம் முக்கியத்துவம் வாய்ந்ததான ஒரு பகுதியாகக் கொண்டு இந்தியா, மக்கள் ஆகியோர் நன்மைக்கு எந்த வகையிலும் முரண்படாத முறையில் இருக்கவும் வேண்டும்.

இப்புதிய மாகாணம் பற்றி மக்கள் கொண்டுள்ள உள்ளங்களின் நிறைவேறுவதற்குத் தேவையான அறிவு விளக்கமும், தைரியமும், சன்மலத் தியாகமும் ஆந்திர அரசிலுள்ள தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படவேண்டுமென்று நான் விரும்புவதுடன், இவ்வாறு ஏற்பட வேண்டுமென்று "பிரார்த்திக்கவும்" செய்கிறேன்.

✶

### ஆந்திர மக்களுக்கு......

1953, அக்டோபர் 1-ம் தேதி பன்று ஆந்திர அரசு ஆரம்பவிழாவின் போது வாசிப்பதற்காக; பிரசாத், பின்வரும் செய்தியை விடுத்திருக்கிறார்:

புதிய ஆந்திர மாகாணம் துவங்குகின்ற சரித்திர முக்கியத்துவ கட்டத்தில், ஆந்திர மக்களின் நீண்டகால ஆசை நிறைவேறுவது குறித்து அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்புதிய அரசு ஏற்படுத்துவது சம்பந்தமாய் முழு வேலைகளைச் செய்யும்படி பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்கள் எவ்வளவோ வேலைகளுக்கிடையில் கஷ்டப்பட்டு உழைத்திருப்பதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். ஆந்திர தேச மக்களுக்கு இப்போது ஒரு மகத்தான வாய்ப்பு கிடைத்திருக்கிறது; புதிய அரசின் பிரச்னைகளை அவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும், அக்காரியத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள திறமைமிக்க நிர்வாக அதிகாரிகளின் குழுவின் ஒத்துழைப்புடன், எவ்விதத் தொல்லையையும் கவனிக்காது பாடுபட்டு வெற்றிகரமாகச் சமாளிப்பார்கள் என்று நான் மனமார நம்புகிறேன். ஆந்திர அரசின் பொறுப்பை வகிப்பவர்கள், தங்கள் கடமைப் பொறுப்பை முழுதும் உணர்ந்து, சகல நிலைகளிலும் முன்னேற்றமடைவதற்குக் கடினமாக உழைப்பார்கள் என்பதிலும், அதன்மூலம் ஆந்திர மக்கள் பெருநலத்தை அடைவதற்கும் வழி செய்வார்கள் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை.

# திராவிடத்தில் ஜவகர்

★

## சென்னையில்

அக்டோபர் 2:

காலை 10 மணிக்கு மவுண்ட் ரோட் 'ராஜாஜி ஹாலில்' மாணவச் சிறுர்களின் அணிவகுப்பைப் பார்வையிடல்.

கிண்டி ராஜ பவனத்திலிருந்து புறப்பட்டு, மவுண்ட் ரோடு வழியாக வந்து, 'ராஜாஜி ஹாலை' அடைதல்.

பகல் 12 மணி:— இந்திய மகளிர் கழகக் கூட்டத்தில் பங்கு கொள்ளல்.

மாலை 5 மணி:— கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குச் செல்லல்.

மாலை 5-30 மணி:— சேத்துப்பட்டு; மாலை 6 மணிக்கு 'ஐலண்டு கிரவுண்ட்' பொதுக் கூட்டம்.

★

## மதுரையில்!

அக்டோபர் 3:

பிற்பகல் 1-30 மணிக்கு விமான மூலம் மதுரைக்கு வருதல்.

மாலை:— மதுரை மீனுட்சி கோயிலுக்குப் போதல்.

மாலை 6-30 மணி:- மதுரை பொதுக்கூட்டம்.

★

## கோவையில்!

அக்டோபர் 4:

காலை 7-45 மணி—மதுரையில் இருந்துவிமானம் மூலம் கோவை புறப்படுதல்.

காரில் மலம்புழா அணைக்கட்டுக்குச் செல்லல.

காலை 10-45 மணி:- பாலக்காடு பொதுக்கூட்டம்.

பிற்பகல்:- பவானி சாகரம் அணைக்கட்டுக்குப் போதல்.

மாலை:- கோவை பொதுக்கூட்டத்தில் பங்கு கொளளல்.

அக்டோபர் 5:- கோவையிலிருந்து காலை 8-45 மணிக்கு விமான மூலம் வெளியேறல

## டிராம்வே நிலைமை

திட்டவட்டமான முடிவு! வேண்டுமென தொழிலாளர்கள் கோரிக்கை

சென்னை, செப். 30—

சென்னை டிராம்வே கம்பெனியின் லைசென்ஸை ரத்து செய்து விட்டபடியால், மீண்டும் டிராம் சர்வீசை நடத்த கம்பெனியார், லைசென்ஸ் கோருவார்களா, கோரமாட்டார்களா என அறிவிக்கும்படி தொழிலாளர்கள் கேட்டுள்ளனர்.

இதுபற்றி சென்னை டிராம்வே தொழிலாளர் சங்கத் தலைவர் விஜயராஜ் விடுத்துள்ள அறிக்கையில், சர்க்கார், டிராம் லைசென்சை ரத்து செய்யாதிருந்தாலும்கூட, பிராவிடண்ட் பண்டை தொழிலாளர் வாங்க முடியும். இதையெல்லாம் கவனித்தும், சர்க்கார் கம்பெனியின் லைசென்ஸை ரத்து செய்தது வருந்தத்தக்கது.— கண்டிக்கத்தக்கது. மீண்டும் டிராம் ஓடுமா என்பதை இரண்டு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

## "தற்போதைய ஆந்திர அரசு இரண்டாம்தரமே"

ஆந்திர யோகியாரின் உண்ணுநோன்பு!

தெனுலி, செப். 30—

சுவாமி சீதாராம், இன்று பகலில், உண்ணுநோன்பு ஆரம்பித்தார். அக்டோபர் 8-ம் தேதி பன்று அவர், தனது பட்டினிப் போரை முடித்துக்கொள்வார்.

தன்னுடைய உண்ணுநோன்புக்கான காரணத்தை, அவர் விளக்குகையில், மொழிவாரி மாகாண அரசில், அந்தந்தத் தாய்மொழியிலேதான் நிர்வாகம் நடக்கவேண்டுமென்றும், வேற்று மொழியைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவது குடியாட்சிக்கு முரணானது என்றும் குறிப்பிட்டார்.

"டில்லி சர்க்கார் அளித்துள்ள தற்போதைய ஆந்திர மாநில அமைப்பும், இரண்டாம் தரமானதே," என்று, அவர் மேலும் கூறியுள்ளார்.

சென்னை, பம்பாய், கல்கத்தா சர்வகலாசாலைகளின் நூற்றாண்டு விழா, 1957-ல் கொண்டாடப்படவிருக்கிறது.

# கழகக் கூட்டங்கள்

★

### சத்தியமங்கலம்:

2—10—53 வெள்ளி மாலை
தலைவர்: கே. சிவக்கொழுந்து
பேசுவோர்:
கோபி. ஜி. என். ராசு
புளியம்பட்டி பி.எ.சாமிநாதன்

★

### திருவில்லிபுத்தூர்

2—10—53 வெள்ளி மாலை
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
தோழியர் பூங்கோதை

## மராட்டிய மாநில அரசு

அமைக்க முக்கியஸ்தர்கள் முயற்சி

நாகபுரி, செப். 28—

மராட்டிய மொழி வழங்கும் பகுதிகளான பம்பாய், மத்திய பிரதேசம், ஐதராபாத் ஆகியவற்றின் தலைவர்கள் கூடி இருதினங்கள் விவாதம் நடத்திய பின், பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய ராஜ்யத்தை அமைக்க வேண்டுமென கீழ்க்கண்டவர்கள் ஒரு உடன்பாட்டில் கையொப்பமிட்டிருக்கின்றனர்:- பி. எல். ஹீரே, ஒய். பி. சவான், டி. கே. குந்தே, தேவகிநந்தன் நாராயணன், ஆர். கே. பட்டில், பி. கே. தேஷ்முக், டாக்டர் ஜி பி. கேத்கர், ஆர். எம். தேஷ்முக், எஸ். கே. வாங்கடே, தேவிசிங் சுவாண், எல். எம். பாட்சர், திருமதி பிரபாவதிதேவி

இந்திய சர்க்கார் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக்கும், என். வி. காட்கிலும், அக்கூட்டத்தில் செய்யும் உடன்படிக்கைகளுக்கு உடன்படுவதாக முன்னரே தெரிவித்துள்ளனர்.

மற்றும் சங்கர் ராவ் தேவ், ஸ்வாமி ராமானந்த தீர்த்தர், வசந்த ராவ் ஆகியோர் இதை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

கரும்பு சாற்றிலிருந்து குறைந்த செலவில் அதிக சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய புதுமுறை யொன்றை பாட்னு விஞ்ஞான சர்வகலாசாலையைச் சேர்ந்த புரொபஸர் தைரேந்திர நாத் கோஷ் கண்டுபிடித்திருக்கிறார். இம்முறையினால், வெல்லப் பாகுக்கும் அதிக ருசி ஏற்படுகிறதாம்.

## நேருவின் செய்தி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோரியவர்தாம்கள் என்பதில் சந்தேகமேயில்லை; அவர்களின் அந்த ஆசை, அங்கீகரிக்கப்பட்டும் இருக்கிறது. ஆனால், அதற்கு இடையூறாக எத்தனையோ விதமான தொல்லைகள் ஏற்பட்டன; அந்த ஆசை பூர்த்தியாவதும் சுணங்கிக்கொண்டே வந்தது; இப்போது, அது, நிறைவேறுகிறது; அதற்கு நம் நல்லெண்ணங்கள் எல்லாம் உரித்தாகட்டும்.

"நான் மாகாணப் பித்தையோ, அல்லது ஐக்கிய இந்தியா என்ற கருத்து உருவாவதற்கும், அது காரியத்தில் நிறைவேறுவதற்கும் குந்தகமாக அமையக்கூடிய வேறு எதையுமோ, சிறிதும் விரும்புகிறவனல்ல. இப்படிச் சொல்வதால், உணர்ச்சியற்ற ஒரே விதமான நிலைமை எங்கும் இருக்க வேண்டுமென்று அர்த்தமாகிவிடாது; எல்லா அதிகாரமும், அளவுக்கு மீறி மத்தியஸ்தானத்திலேயே குவிய வேண்டுமென்றும் அர்த்தமாகிவிடாது. ஸ்தல சுய ஆட்சி ஏற்பாட்டிலும், எவ்வளவு தூரம் அதிகாரத்தை பரவலாக்கி விநியோகிக்க முடியுமோ அவ்வளவு தாராளமாய் அதிகாரத்தை விநியோகிப்பதிலும்நான் ஆர்வமுள்ளவன. ஆனால் இன்றியமையாத அடிப்படை ஒற்றுமையும், கணிசமான அளவுக்கு மத்திய அதிகாரக் குவிவும் இல்லாமற்போனால், இன்றைய நிலையில், முற்போக்கு ஏற்படாது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தேசத்தின் அங்கங்களைப்பற்றி அதிகமாகக் கவனித்து, முழுமையைப் பற்றிக் குறைவாக கவனஞ் செலுத்திவந்தால், நாம், அரசியல் பலவீன மடைவோம் என்பது மாத்திரமல்லாமல், பொருளாதார முற்போக்குத் திட்டமிட்டு வேலை செய்வதும் சிரமமாகிவிடும். இந்தியாவை உணர்ச்சிபூர்வமான அடிப்படையில் ஐக்கியப்படுத்துவது, இன்று, நாம் செய்ய வேண்டிய பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

"புதிய ராஜ்யங்களை அமைப்பதாலும், இந்தியாவில் தற்போதைய கட்டுக்கோப்பைத் திருத்தியமைப்பதனாலும் இந்திய மக்களின் உள்ளத்திலும், சிந்தனையிலும் உருவாகி வருகிற ஐக்கியம் எவ்விதத்திலும்பலவீனமடையாதென்றே நான் நம்புகிறேன்."

"நீண்ட கால சரித்திர வரலாறு உள்ளதும், பல வகையிலும் முன்னணியில் உள்ளதுமான எஞ்சிய சென்னை ராஜ்யத்துக்கும், இச்சந்தர்ப்பத்தில், நான் என் நல்லெண்ணங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்."

## வேலையில்லாதோர் தகராறைத் தீர்க்க போப் காட்டும் வழி!

ரோம், செப். 28—

ஜனத் தொகையைக் கட்டுப்படுத்துவதற்குக் கர்ப்பத் தடையை அனுசரிக்கக் கூடாதென போப்பாண்டவர் கண்டித்திருக்கிறார்.

"சில நாடுகளில் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாதோர் திண்டாட்டம் பற்றி குறிப்பிட்டு, அபிவிருத்தியடையாமலிருக்கும் பகுதிகளுக்கு அவர்களை அனுப்பிவைப்பதன் மூலம், ஜனத் தொகை பெருக்கத்தைத் தளர்த்தலாம்," என அவர் சொன்னார்.


டால்மியாபுரம் போராட்ட நிதிக்காக!

3—10—53 சனி இரவு 10-மணிக்கு
4—10—53 ஞாயிறு இரவு 10-மணிக்கு

M. G. R. நாடக மன்றத்தாரால் — திருச்சி தேவர் மன்றத்தில்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்

எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேல், எம். கே. முஸ்தபா, என். எஸ். நாராயணபிள்ளை. முத்துக்கூத்தன், எஸ். எம். திருப்பதிசாமி, ஏ. எஸ். மணி, குண்டுமணி, சேதுபதி, ஏ. ரத்னமாலா, ராஜேஸ்வரி, டி. எஸ். மரகதம், சுலோசனு மற்றும் பலர் நடிக்கும்

இடிந்த கோயில்

நாடகம் நடைபெறும்

★

கட்டணம்: 5—0—0, 3—0—0, 2—0—0, 1—0—0
பெண்கள், தரை அணு 0—8—0

முதல் இரண்டு வகுப்புகளும் ரிசர்வ் செய்யப்படும். தி. மு. கழகம் திருச்சி.


திராவிட முன்னேற்றக் கழகத் அச்சகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.